செய்தி வெளியீடு எண் :27 நாள் :16.06.2020

**தேனி மாவட்டம்**

**ரூபாய் ஐந்து கோடி வரையிலான உற்பத்தி மற்றும் சேவை தொழில் திட்டங்களுக்கு புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத்திட்டத்தின் (NEEDS) கீழ் 25% மானியத்துடன் கூடிய வங்கி கடனுதவி பெற விண்ணப்பித்து பயன்பெறலாம் - மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தகவல்:-**

******

தேனி மாவட்டத்தில், கிராம மற்றும் நகர்ப்புறங்களில் புதிய தொழில் நிறுவனங்களை உருவாக்குவதன் மூலம், சுயவேலைவாய்ப்பு, பொருளாதாரம் மற்றும் தொழில் வளர்ச்சியை மேம்படுத்தும் நோக்கத்தோடு, தமிழக அரசால் “புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம் (NEEDS)” அறிவிக்கப்பட்டு, மாவட்டத் தொழில் மையத்தால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் 21 வயது முதல் 35 வயது வரை உள்ள பொதுப்பிரிவினரும், 21 வயது முதல் 45 வயது வரை உள்ள சிறப்புப்பிரிவினரும் (ST/ST, BC, MBC, பெண்கள், மாற்று பாலினத்தவர்கள், முன்னாள் இராணுவத்தினர் மற்றும் மாற்றுத்திறனாளிகள்) சேவை மற்றும் உற்பத்தி தொழில்கள் துவங்க வங்கி கடனுதவி கோரி விண்ணப்பிக்கலாம். விண்ணப்பதாரர் முதல் தலைமுறை தொழில் முனைவோராகவும், பட்டப்படிப்பு/ பட்டயப்படிப்பு/ ITI தொழிற்கல்வி தேர்ச்சி பெற்றவராகவும் இருக்க வேண்டும்.

இத்திட்டத்தில் சேவை நிறுவனங்களான ஜே.சி.பி (எர்த் மூவிங் எக்யுப்மென்ட்) வாகனம், எல்.பி.ஜி. உலர் சாம்பல் டேங்கர் வாகனம், ரோடு ரோலர், பிட்டுமன் மிக்ஸிங் மற்றும் லேயிங் கிரேன் மற்றும் போர்க் லிப்ட் இயந்திரம் வாகனம், கான்கீரீட் கலவை இயந்திரம் உபகரணங்களுடன், போர்வெல் வாகனம், ரெடிமிக்ஸ் கான்கீரீட் கேரீயர், ரெகவரி வண்டி, கான்கீரிட் பில்லிங் வாகனம், தொழிற்சாலை பயன்பாட்டிற்கான எல்.பி.ஜி / கேஸ் எடுத்து செல்லும் வாகனம், போன்ற சேவை தொழிலுக்கும் மற்றும் உற்பத்தி தொழிலுக்கும் ரூபாய் 10.00 லட்சம் முதல் ரூ.5.00 கோடி வரையிலான தொழில் திட்டங்களுக்கு 25 சதவீத மானியம் (அதிகபட்சம் ரூபாய் 30.00 லட்சம்) மற்றும் 3% வட்டி மானியத்துடன் கூடிய வங்கி கடனுதவி பெற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இத்திட்டத்தின் கீழ் இந்த நிதியாண்டின் 2020-21 ஆண்டு மார்ச் மாதம் 31-ந் தேதி வரை வழங்கப்படும் கடன் திட்ட பயனாளிகளுக்கு தொழில் முனைவோர் பயிற்சியில் இருந்து தமிழக அரசால் விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. அதில் பயன்பெற ஆர்வமுள்ள தொழில் முனைவோர்கள் https://www.msmeonline.tn.gov.in/needs என்ற இணையதளத்தில் விண்ணப்பம் செய்து இத்திட்டத்தின் கீழ் மானியத்துடன் வங்கி கடனுதவி பெற்று தொழில் துவங்க முன்வருமாறும், மேலும் விபரங்களுக்கு பொது மேலாளர், மாவட்ட தொழில் மையம், 9080078933 என்ற தொலைபேசியிலும் தொடர்பு கொண்டு பயன்பெறலாம் என தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**